# மாலத்தீவில் பாராளுமன்ற தேர்தல்

மார்ச் 12,2014

திட்டமிடப்பட்டிருந்தபடி மார்ச் மாதம் 22ம் திகதியில் பாராளுமன்ற தேர்தல் நடத்துவதாக மாலத்தீவு அரசு வெளியிட்டுள்ள உறுதிப்பாட்டை நாம் வரவேற்கிறோம்.

இந்தியா தொடர்ந்து மாலத்தீவில் ஜனநாயக செயல்முறைகள் மற்றும் நிறுவனங்கள் வலுப்படுத்துவதை ஆதரித்து வருகிறது.இந்த சூழலில்,மாலைதீவு தேர்தல் ஆணைய தலைவர் மற்றும் துணை தலைவர் தங்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டது குறித்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ள தலைவரின் சிறை தண்டனை குறித்தும் இந்திய அரசு அக்கறை தெரிவித்துள்ளது.

மாலத்தீவின் அண்டை மற்றும் நெருங்கிய நாடாக,மாலத்தீவில் உள்ள அனைத்து அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசியல் அமைப்பை மதிக்குமாறு, இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் மேலும் பாதுகாக்கபட்டும் மற்றும் வலுப்படுத்தப்படும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.வரவிருக்கும் தேர்தல் ஒரு சுதந்திரமான,நேர்மையான மற்றும் நம்பகமான முறையில் நடந்து மாலைத்தீவு மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை நிறைவேற்ற உதவும் எனவும் நம்புகிறோம்.

புது டில்லி

மார்ச் 12,2014